# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றல் அறிக்கை
# Performance Report

# 2016











**කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය**

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு

**Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development**

# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றல் அறிக்கை
# Performance Report

# 2016

කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

**Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development**

කාර්යසාධන වාර්තාව - 2016
செயலாற்றல் அறிக்கை - 2016
**Performance Report - 2016**

කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය
மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு
Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development

P.O. Box 562, No. 45, St. Michale's Road, Colombo 03.
Tel: 0112 541 369 Fax : 0112 328 117
Email : smpid@sltnet.lk / mhplanning2016@gmail.com
Web site www.mpid.gov.lk

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

# செயலாற்றல் அறிக்கை 2016



# தொலைநோக்கு

பெருந்தோட்டத்துறை சமூகத்தை ஏனைய சமூகங்களுடன் சரிசமமாக இருக்கும் வகையில் கௌரவம், சுயமரியாதை மற்றும் சமூக அந்தஸ்துடன் கூடிய ஒரு கிராமிய சமூகமாக நிலைமாற்றுதல்.

# குறிக்கோள்

வாழ்விடம், வாழ்க்கைத் தரம் மற்றும் சமூகப் பொருளாதார வசதிகளை முன்னேற்றுவதனூடாக பெருந்தோட்டத்துறைச் சமூகத்தின் நலன்களை மேம்படுத்தல்.



# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 8-9 |
| 2. | அமைச்சைத் தாபித்தல் | 10 |
| 3. | அமைச்சின் பிரதன செயற்பணிகள் | 10 |
| 4. | அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பும், தற்போதையப் பதவியணியினரும் | 11-12 |
| 5. | அமைச்சின் அபிவிருத்தி அணுகுமுறைகளும் முன்னுரிமைகளும் | 13 |
| | 5.1 அபிவிருத்தி அணுகுமுறை | 13 |
| | 5.2 அமைச்சின் முன்னுரிமைகள் | 13-14 |
| 6. | அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்தும் பொறிமுறையும் நிறுவனக் கட்டமைப்பும் | 15 |
| | 6.1 அமுல்படுத்தும் பொறிமுறை | 15 |
| | 6.2 நிறுவனக் கட்டமைப்பு | 16 |
| 7. | அமைச்சின் செலவின பொழிப்பு | 17 |
| 8. | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முன்னேற்றம் | 18 |
| | 8.1 தோட்டத்துறை சமுதாயத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்க-ான 5 வருட தேசிய செயற்றிட்டம் (2016 - 2020) | 18-23 |
| | 8.2 மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடுகள் | 24-33 |
| | 8.3 பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி | 33-40 |
| | 8.4 வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 41-44 |
| 9. | அமைச்சினால் 2016ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட விசேட வெற்றிகள் | 45-46 |
| 10. | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் | 47 |
| | 10.1 பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் | 47-52 |
| | 10.2 சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் காணப்பட்ட நிறுவனங்கள் | 53-56 |
| | 10.2.1 ஹட்டன் - பூல்பேங்கில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் | |
| | 10.2.2 பிரஜா சக்தி (ஈகியோஸ்ட்) நிலையங்கள் | |
| | 10.2.3 தொண்டமான் கலாசார நிலையம், ரம்பொட | |
| | 10.2.4 நோர்வூட் விளையாட்டு வளாகம் | |



ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும் பங்கு வகிக்கும் பெருந்தோட்ட மக்கள் இதுவரை முகங்கொடுத்து வந்த சமூக பிரச்சினைகளில் இருந்து அவர்களை மீட்டு ஏனைய மக்களுக்கு சமமான சமூக அந்தஸ்துடன், சுய மரியாதையுடனும், சுய கௌரவத்துடனும் வாழும் கிராமிய சமுதாயமாக மாற்றியமைக்கும் நோக்குடன் புதிய அரசாங்கத்தின் ஆரம்பத்துடன் புதுப்பொலிவுடன் 1933/13 இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய 2015.09.25 ஆம் திகதி மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு உருவாக்கப்பட்டது.



*இச்சமூகத்தின் வளர்ச்சி மற்றும் அவர்களை வலுவூட்டும் செயற்பாடுகளை மிகக் குறைந்த காலத்தில் நிறைவேற்றுவது அரிதானவொன்றாகும்.*

*இது ஓர் தொடர்ச்சியான செயற்பாடாகும். இவ்வமைச்சினால் முன்னெடுக்கப்படும் மற்றும் முன்னெடுக்க உத்தேசித்துள்ள நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் இச்செயற்பாடுகளை துரிதப்படுத்துவதாக அமையும் அதேவேளை இச்செயற்பாடுகள் இச்சமுதாயத்தில் காணப்படுகின்ற சமூக முரண்பாடுகளை வேரோடு அழிக்கும் வரை நடைமுறைப்படுத்தப்படும்.*

# 1. அறிமுகம்

சுமார் இரண்டு நூற்றாண்டுகால வரலாற்றுக்கு உரிமை கூறும் இலங்கை பெருந்தோட்ட சமுதாயத்தினரின் ஆரம்பமானது இந்நாடு பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலம்வரை நீண்டுசெல்கின்றது. பிரித்தானியர்களினால் 1840இல் மலையகத்தில் கோப்பியை பயிர்செய்வதற்காக தொழிலாளர்களாக தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட இவர்கள் கோப்பிப் பயிர்ச்செய்கை அழிவடைந்ததை அடுத்து ஏற்படுத்தப்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கைகளை மையமாகக் கொண்டு விசேடமான ஒரு தனிமைப்பட்ட இனப்பிரிவினராக வளர்ச்சியடைந்துள்ளனர்.

லயன் அறைகளைக் கொண்ட வரிசையாக அமைந்த வீடுகளை தமது இருப்பிடமாகக் கொண்டு மிகவும் வறிய தொழிலாளர்களின் வாழ்க்கைமுறைக்கு உரிமைகூறும் இவர்களை மனித அபிவிருத்திச் சுட்டிகள் (நகர மற்றும் கிராமிய) உடன் ஒப்பிடும்போது ஏனைய இனப்பிரிவினர்களைவிட கணிசமான சமூக முரண்பாடுகளை எதிர்கொண்டிருப்பதை அவதானிக்க முடியும்.

## தோட்டப்புற சமுதாயத்தினரின் சமூக அபிவிருத்தி நிலைமைகளை வெளிப்படுத்துகின்ற புள்ளிவிபரங்கள்

| சுட்டி - சுகாதாரமும் போஷாக்கும் | தேசிய | நகர்ப்புற | கிராமிய | தோட்டப்புறம் |
|---|---|---|---|---|
| வறுமை தலைச் சுட்டி (HIES 2013) | 6.7 | 2.1 | 7.6 | 10.9 |
| சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ளுதல் (HIES 2013) | 89.7 | 98.9 | 90.9 | 52.4 |
| அரை உரித்து வீடுகள் (HIES 2013) | 17.8 | 7.4 | 16.9 | 76.1 |
| எழுத்தறிவு வீதம் (HIES 2013) | 95.7 | | | 86.1 |
| மேம்படுத்தப்பட்ட மலசலகூட வசதிகளுடனான குடும்பங்கள் (HIES 2012/2013) | 87.2 | | | 73.3 |
| தேசிய பௌதீக தரத்திற்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டுள்ள முன்பிள்ளை பராமரிப்பு நிலையங்கள் | 50.7 | | | 24 - (All estates) 64 - |



## தோட்டப்புற சமுதாயத்தினரின் சமூக அபிவிருத்தி நிலைமைகளை வெளிப்படுத்துகின்ற புள்ளிவிபரங்கள்

| சுட்டி - சுகாதாரமும் போஷாக்கும் | தேசிய | நகர்ப்புற | கிராமிய | தோட்டப்புறம் |
|---|---|---|---|---|
| புதிய பிறப்பு மரணவிகிதம் மூ(1000 பிறப்புகளுக்கு) | 11 | 6.0 | 15.0 | 18.0 |
| சிசு மரண விகிதம் % (1000 பிறப்புகளுக்கு) | 9.7 | 10.0 | 19.0 | 29.0 |
| 5 வயதுக்கு குறைவான சிறுவர்கள் மற்றும் இனப்பெருக்க வயதில் உள்ள பெண்களுக்கு மத்தியிலுள்ள இரத்த சோகை % | 20% (யுனிசெப்) 2012) | | | 61% (யுனிசெப்) 2012) |
| 5 வயதுக்கு குறைவான மந்த போஷாக்குடன் வளர்ந்துவரும் பிள்ளைகளின் விகிதம் | 18 | 13.8 | 16.2 | 40.2 |
| 5 வயதுக்கு குறைவாக உள்ளதுடன் குறை நிறையைக் கொண்ட சிறுவர்களின் விகிதம் | 21.8 | 16.5 | 21.2 | 30.1 |
| நிறை குறைவாக பிறப்பு (2.5 கிலோ கிராமுக்கு குறைவு) | 16.6 | 12.8 | 16.4 | 31.0 |
| 5 வயதுக்கு குறைவானதும் தமது உயரத்திற்கு ஏற்ற நிறை இல்லாததுமான சிறுவர்கள் | 14.7 | | | 16.4 |

மூலம் : சனத்தொகை சுகாதார ஆய்வு(DHS) 2006/07இ வீட்டு அலகுகளின் வருமான மற்றும் செலவின ஆய்வு (HIES) 2012/13



# 2. அமைச்சைத் தாபித்தல்

ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சமுதாயத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற, நாட்டின் தேசிய வருமானத்திற்குப் பாரியளவில் பங்களிப்பை வழங்குகின்ற தோட்டப்புற சமுதாயத்தினர் இதுவரை காலமும் எதிர்நோக்கிய சமூக முரண்பாடுகளை ஒழித்து ஏனைய இனங்களுக்கு சமமான சமூக அந்தஸ்து, கௌரவம், மற்றும் சுயமரியாதையைக் கொண்ட கிராமிய சமுதாயமாக வளர்ச்சியுறச் செய்யும் நோக்கத்துடன் புதிய அணுகுமுறையின் கீழ் தற்போதைய புதிய அரசாங்கமானது, ஆட்சிக்கு வந்ததை அடுத்து 2015.09.25ஆந் திகதி வெளியிடப்பட்ட 1933/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் மூலம் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு தாபிக்கப்பட்டது.

# 3. அமைச்சின் பிரதன செயற்பணிகள்

3.1 அரசாங்க மற்றும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றுகின்ற காணிகள் இல்லாத லயன் வீடுகளில் வாழும் மக்களுக்கு வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக புதிய கிராமங்கள்/நகரங்களை உருவாக்குதல்

3.2 தோட்டத்துறை சமுதாயத்தினரை வலுவூட்டுவதற்கான வாழ்வாதார வலுவாக்கல் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்

3.3 தோட்டப்புற சமுதாயத்தினரை, பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக மேம்படுத்துவதற்கான அடிப்படை வசதிகள் உள்ளடங்கலாக ஏனைய தேவைகளை பூர்த்திசெய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்

3.4 கிராமிய தோட்டத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்



# 4. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பும், தற்போதைய பதவியணியினரும்

## 4.1 நிறுவன ஒழுங்கமைப்பு



## அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தற்போதைய பதவியணியினர் (2016.12.31 ஆம் திகதிக்கு)

| **தொ. இல.** | **பதவி** | **சேவை** | **அங்கிகரி-க்கப்பட்ட பதவியணி** | **தற்போதைய பதவியணி** |
|---|---|---|---|---|
| 1. | செயலாளர் | | 1 | 1 |
| 2. | மேலதிக செயலாளர் | இ.நி.சே. | 2 | 2 |
| 3. | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே. | 1 | 1 |
| 4. | பணிப்பாளர் | இ.நி.சே. | 1 | 1 |
| 5. | பணிப்பாளர் | இ.தி.சே. | 1 | 1 |
| 6. | பணிப்பாளர் | இ.பொ.சே | 1 | 0 |
| 7. | பிரதம கணக்காளர் | இ.க.சே | 1 | 1 |
| 8. | பிரதம உள்ளக கணக்க-ாய்வாளர் | இ.க.சே | 1 | 1 |
| 9. | உதவி/பிரதி பணிப்பாளர் | இ.நி.சே | 2 | 1 |
| 10. | உதவி/பிரதி பணிப்பாளர் | இ.தி.சே | 2 | 2 |
| 11. | உதவி/பிரதி பணிப்பாளர் | இ.பொ.சே | 1 | 1 |
| 12. | கணக்காளர் | இ.க.சே | 1 | 1 |
| 13. | உதவிச் செயலாளர் | இ.நி.சே | 1 | 0 |
| 14. | நிர்வாக அலுவலர் | அ.மு.உ.சே | 1 | 1 |
| 15. | மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | 2 | 0 |
| 16. | தொழில்நுட்ப அலுவலர் | இ.தொ.சே | 3 | 0 |
| 17. | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | இ.த.தொ.தொ.சே | 1 | 0 |
| 18. | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | | 1 | 1 |
| 19. | புள்ளிவிபரவியல் அலுவலர் | | 1 | 0 |
| 20. | அபிவிருத்தி அலுவலர் | அ.அ.சே | 14 | 14 |
| 21. | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே | 20 | 12 |
| 22. | பெருந்தோட்ட சமுதாய தொட-ர்பாடல் வசதியளிப்பு அலுவலர் | அமைச்சுசார் | 255 | 183 |
| 23. | புகைப்படகலைஞர் | | 1 | 1 |
| 24. | கெமரா கலைஞர் | | 1 | 1 |
| 25. | உதவி புகைப்படகலைஞர் | | 1 | 1 |
| 26. | சாரதி | இணைந்த சாரதி சேவை | 12 | 12 |
| 27. | அலுவலக சிற்றூழியர் | அ.சி.சே | 13 | 7 |
| | **மொத்தம்** | | 342 | 246 |



# 5. அமைச்சின் அபிவிருத்தி அணுகுமுறைகளும் முன்னுரிமைகளும்

## 5.1 அபிவிருத்தி அணுகுமுறை

நாட்டின் மத்திய, ஊவா, சப்ரகமுவ, மேற்கு, வடமேல் மற்றும் தென் மாகாணங்களின் சில பகுதிகளை மையமாகக் கொண்டு தேயிலை மற்றும் இறப்பர் தோட்டப்புற பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்ற சுமார் 250000 குடும்பங்களைச் சேர்ந்த (ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சனத்தொகையை கொண்ட) தோட்டப்புற மக்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியை முறையான திசைமுகப்படுத்தலின் ஊடாகவும் சிறந்த கண்காணிப்புடனும் மேற்கொள்ளும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள ஐந்து வருட தேசிய செயற்றிட்டத்தை (2016-2020) அமுல்படுத்த இந்த அமைச்சினால் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

தோட்டப்புற சமுதாயத்தினரின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான இந்த செயற்றிட்டம் பற்றி பரந்தளவில் பிரச்சாரம் செய்து அதன் மூலம் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள துறைகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஏனைய நேர்வரிசை அமைச்சுக்கள், மாகாண அமைச்சுக்கள் உள்ளடங்கலாக சகல நிறுவனங்களினதும் பூரணமான பங்களிப்பைப்பெற்று தோட்டப்புற சமுதாயத்தினரின் சமூக, பொருளாதார அபிவிருத்தி செயன்முறையை வலுவூட்டுகின்ற புதிய அபிவிருத்தி அணுகுமுறையில் அமைச்சு பிரவேசித்துள்ளது. இதற்காக சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களுடனுமான ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் வழிப்படுத்தலானது இந்த அமைச்சினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 5.2 அமைச்சின் முன்னுரிமைகள்

தேசிய செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தோட்டத்துறை வீடுகளை நிர்மாணித்தல், சமூக பொருளாதார அபிவிருத்திக்கான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் தோட்டத்துறை மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வது இந்த அமைச்சின் முன்னுரிமை செயற்பணியாக உள்ளது.






மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு




# 6. அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்தும் பொறிமுறையும் நிறுவனக் கட்டமைப்பும்

## 6.1 அமுல்படுத்தும் பொறிமுறை

அமைச்சினால் வழிநடாத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் செயற்பணி பிரதானமாக அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் உள்ள நிறுவனமொன்றான பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாகவும், அதற்கு மேலதிகமாக தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம், பிரஜா சக்தி நிலையம், மாவட்ட / பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் ஊடாகவும் மேற்கொள்ளப்படுகின்றது.

## அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் நிறுவனக் கட்டமைப்பு

| முன்னுரிமைத்துறை | அமுல்படுத்தும் நிறுவனம் |
|---|---|
| **(1) தோட்டத்துறை வீடமைப்பு அபிவிருத்தி திட்டம்** | |
| (i) பசும் பொன் வீடமைப்புத்திட்டம் | பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் |
| (ii) இந்திய உதவியுடனான வீடமைப்புத்-திட்டம் | UN - HABITAT, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் |
| **(2) பின்தங்கிய பிரதேசங்களில் சமூக, பொருளாதார அபிவிருத்தி.** | |
| (I) லயன் அறைகளுக்கு கூரைகளை பொருத்துதல் | பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் |
| (II) குடிநீர் வசதிகளை பெற்றுக்கொடுத்தல் | பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் |
| (III) சுகாதார வசதிகளை பெற்றுக்கொடுத்தல் | |
| (IV) சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் உள்ளடங்கலாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் (உட்பிரவேசப் பாதைகள்/மின்சாரம்) | |
| **3. வாழ்வாதார அபிவிருத்தி** | |
| (1) திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி | தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் பிரஜாசக்தி நிகழ்ச்சித்திட்டம் ஊடாக |
| (II) சமுதாயத்தை வலுவூட்டல் | பிரஜா சக்தி கருத்திட்டம் மற்றும் சுழல் நிதியத்தின் மூலம் -பிரதேச செயலகம் / மாவட்ட செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பெருந்தோட்ட சமுதாய தொடர்பாடல் வசதியளிப்பாளர் அலுவலர்கள் ஊடாக |
| (III) சுகாதாரமும் போஷாக்கும் | |

## 6.2 நிறுவனக் கட்டமைப்பு




## 7. அமைச்சின் செலவின பொழிப்பு (2016.01.01 தொடக்கம் 2016.12.31 வரை)

### அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் நிறுவனக் கட்டமைப்பு

| தொகுதி / நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2016 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள் ரூபா ('000) | 2016/12/31 ஆம் திகதிக்கான செலவினம் ரூபா ('000) | செலவின விகிதம் % |
|---|---|---|---|
| மீண்டெழுவன | **223,421** | **189,124** | **84.65** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 153,850 | 126,796 | 82.42 |
| பொது நிர்வாகம் | 69,571 | 62,328 | 89.59 |
| | | | |
| மூலதனம் | **1,573,580** | **1,094,971** | **69.58** |
| பொதுநிர்வாகம் | 55,580 | 53,572 | 96.39 |
| | | | |
| மூழு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | **1,518,000** | **1,041,399** | **68.6** |
| அ. மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடுகள் | 1,200,000 | 726,429 | 61 |
| ஆ. பின்தங்கிய பிரதேசங்களின் சமூக பொருளாதார அபிவிருத்தி | 200,000 | 199,997 | 100 |
| இ. வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் | 118,000 | 114,973 | 97 |
| | | | |
| **மொத்தம்** | 1,797,001 | 1,284,095 | 71.46 |

### அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்



# 8. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முன்னேற்றம்

## 8.1 தோட்டத்துறை சமுதாயத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான 5வருட தேசிய செயற்றிட்டம் (2016 - 2020)

தோட்டப்புற சமுதாயத்தின் வறுமையுடன் பிரதானமாக தொடர்புபட்டுள்ள சுகாதாரம், போஷணை , கல்வி மற்றும் முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி, திறன் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, பெண்களையும் இளைஞர்களையும் வலுவூட்டல், வீடமைப்பு, குடிநீர், சுகாதார வசதி உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் நல்லாட்சி ஆகிய துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அது தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்களை தீர்த்துவைத்து பெருந்தோட்ட சமுதாயத்தினரின் சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக தேசிய மட்டத்தில் செயற்படும் பொருட்டு குறித்த சகல தரப்பினர்களினதும் பூரண பங்களிப்பை பெற்றுக்கொள்வது இந்த 5 வருடகால தேசிய செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இந்த தேசிய திட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள சகல தரப்பினர்களையும் ஒருங்கிணைப்புச் செய்தல், வழிநடாத்தல் மற்றும் மதிப்பீடு செய்வது இந்த அமைச்சினூடாக மேற்கொள்ளப்படுவதுடன் அதன் முன்னேற்றத்தை மும்மாத அடிப்படையில் கண்காணிப்புச் செய்யும் பொறுப்பு கையளிக்கப்பட்டிருப்பது கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்காகும். அவ்வாறே தேசிய செயற்றிட்டம் பற்றி அறிவுறுத்தல், தகுந்த கருத்திட்டப் பிரேரணைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றை அமுல்படுத்த தேவையான உள்நாட்டு வெளிநாட்டு நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதும் இந்த அமைச்சின் செயற்பணியின் கீழ் உள்ளடக்கப்படுகின்றது.





## 8.1.1 தேசிய செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்

அ தேசிய செயற்றிட்டம் தயார்செய்யப்பட்டு கௌரவ பிரதமரின் தலைமையில் உள்நாட்டு வெளிநாட்டு பிரதிநிதிகளின் பங்கேற்புடன் 2016.03.10ஆந் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஆ தேசிய செயற்றிட்டத்தின் அச்சுப்பிரதிகள் மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அமைச்சின் இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

இ. தேசிய செயற்றிட்டத்தை அமுல்படுத்தும் பொறிமுறைகளை தயார்செய்தல், அது சம்பந்தமான சிக்கல்கள், தேவையான தலையீடுகளை மேற்கொள்வது மற்றும் அமுல்படுத்த வேண்டிய விசேட பிரேரணைகள் / கருத்திட்டங்கள் பற்றி கல்விமான்கள், அமைச்சு அலுவலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடாத்தல் மற்றும் அவர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளல் (Think Tank Meetings)

ஈ. தேசிய செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்கான கருத்திட்ட பிரேரணைகளை பெற்றுக்கொடுத்தல், வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளை ஒதுக்கிக்கொள்ளல், தாபன செயற்றிட்டங்களை தயார்செய்தல் பற்றி நேர்வரிசை அமைச்சு மற்றும் மாகாண அமைச்சுக்கள் உள்ளடங்கலாக ஏனைய நிறுவனத்தலைவர்களை அறிவுறுத்துவதற்கான பிரதேச ரீதியான செயலமர்வுகளை நடாத்தல்.

உ. நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் விளைவாக துறைசார்ந்த அமைச்சுகளிடமிருந்து தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் தெரிவுசெய்யப்பட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கான முன்மொழிவுகள் கோரப்பட்டன.

ஊ. பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பாளர்களுக்கு தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் அமுலாக்கல் நடவடிக்கைகளில் அவர்களின் உதவியை பெற்றுக்கொள்வது தொடர்பாக தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலமாக 3 செயலமர்வுகள் நடத்தப்பட்டன.








தேசிய செயற்றிட்டதினை கௌரவ பிரதமருக்கு கையளிக்கும் நிகழ்வு - 10.03.2016



தேசிய நடவடிக்கைத்திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பாக பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பாளர்களுக்கான அறிவூட்டல் செயலமர்வு - 27-09-2016



அமெரிக்க தூதுவருடன் தேசிய செயற்றிட்டம் பற்றிய கலந்துரையாடல்

அமைச்சினால் தயாரிக்கப்பட்ட தேசிய செயற்றிட்டத்தின் ஆவணப்படம்





ஏனைய சமூகங்களுக்கு இணையாக வாழும் உரிமையைப் பெருந்தோட்ட மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் அபிலாசையுடன், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியிலான தீர்மானத்திற்கு அமைய 7 பர்ச் காணியில் 550 சதுர அடியில் குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளுடன் கூடிய தனி வீடுகளை பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டம் இவ் அமைச்சினால 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

## 8.2 மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடுகள்

இருப்பிடங்கள் தொடர்பான சுட்டிகளை கவனத்தில் கொள்ளும்போது மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இனப்பிரிவினர் என்ற வகையில் பெருந்தோட்ட சமுதாயத்தினரை கவனத்தில் கொள்ளலாம். பெருந்தோட்ட சமுதாயத்தினர் வாழ்ந்துவரும் வீடுகளில் 58□ற்கும் மேற்பட்டவை லயன் அறைகளாக குறிப்பிடப்படுகின்றன (தேசிய ரீதியாக நோக்கும்போது இவ்வாறான வீடுகளின் விகிதம் 3.8% ஆகும்) வரிசை வரிசையாக ஒன்றுக்கொன்று இணைந்து காணப்படுகின்ற சுமார் 200 சதுர அடி அளவைக்கொண்டதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ள இந்த வீடுகளில் சுமார் 172,700 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். காற்றோட்டம் குறைவாக இருத்தல், அதிக சனநெரிசல், தனித்துவம் இல்லாமை மற்றும் பல்வேறுபட்ட துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகுதல், அநாதரவான நிலைமை, சமூக அங்கீகாரம் இல்லாமை போன்ற பல்வேறு சமூக சிக்கல்களும் இதனால் உருவாகி உள்ளன.

ஏனைய சமுதாயத்தினருக்கு சமமான சுயகௌரவத்துடன் வாழும் உரிமையை தோட்டப்புற சமுதாயத்தினருக்கு உரித்தாக்கிக்கொடுக்கும் அபிலாஷையுடன் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைசார் தீர்மானத்தின் அடிப்படையில் 07 பர்ச்சஸ் அளவான காணியில் 550 சதுர அடி அளவைக்கொண்ட குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளும் உள்ளடங்கிய தனிவீட்டு அலகுகளை பெற்றுக்கொடுக்கும் கருத்திட்டம் 2015ஆம் ஆண்டு இந்த அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. ஐந்து வருட செயற்றிட்டத்திற்கு அமைய 2020ஆம் ஆண்டின் இறுதியில் 50,000 வீட்டு அலகுகளை தோட்டப்புற சமுதாயத்தினருக்கு உரித்தாக்கிக்கொடுப்பது இந்த அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

அதற்கமைய 2016ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் ஏற்பாடுகள் மற்றும் இந்திய அரசாங்கத்தின் பூரண உதவியின் கீழ் இரண்டு வீடமைப்புத்திட்டங்கள் இந்த அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### 8.2.1 பசும்பொன் வீடமைப்புத்திட்டம் (Green Gold) கிராமங்கள்/நகர எண்ணக்கருவின் கீழ் - (Village/Township Concept)

2016ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட பசும்பொன் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டின் இறுதிக்குள் 1401 வீடுகளை நிர்மாணிக்க அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது. நுவரெலியா, ஹட்டன், கேகாலை, பதுளை, இரத்தினபுரி, கண்டி மற்றும் காலி ஆகிய 7 பெருந்தோட்ட பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் நிர்மாணிக்கப்படுகின்ற இந்த வீடமைப்புத்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் தற்போது பல்வேறு கட்டங்களில் இடம்பெற்று வருகின்றன. ஒரு வீட்டின் பெறுமதி ரூபா 650,000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள செலவிடப்படுகின்ற தொகையில் 47% அரசாங்க ஏற்பாடுகளாகவும் எஞ்சிய 53% கடன்தொகையாகவும் வழங்கப்படுவதுடன் மேற்படி கடன் தொகை 7.5% மான வட்டி வீதத்தின் கீழ் 15 வருடங்களுக்குள் பயனாளிகளான ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிட்டுக் கொள்ளப்படும். மண்சரிவினால் வீடுகளை இழந்துள்ளவர்களுக்கு நன்கொடையாக இந்த வீடுகள் நிர்மாணித்துக்கொடுக்கப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 493 வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன. ஏனைய வீடுகளின் கட்டுமான பணிகள் வெவ்வேறு மட்டங்களில் உள்ளது. அதேபோன்று 27 மில்லியன் ரூபா செலவில் 513 குடிநீர் நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன.





ஹட்டன் பிரதேச காரியாலயத்தினால் ஹொரண பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான பம்பரகலை தோட்டத்தின் பம்பரகலை பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் - பயனாளிகளின் எண்ணிக்கை 20 கணிப்பிடப்பட்ட செலவு - 13 மில்லியன் ரூபா

**பசும்பொன் வீடமைப்பு கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் (2016 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு)**

| பௌதீக முன்னேற்றம் | வீடுகளின் எண்ணிக்கை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை (PHDT) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நுவ-ரெலியா | ஹட்டன் | கண்டி | பதுளை | இரத்தி-னபுரி | கேகாலை | காலி |
| முடிவடைந்தவை | 493 | 189 | 77 | 71 | 102 | - | 6 | 48 |
| முடிவடையும் நிலையில் உள்ளவை | 937 | 254 | 254 | 80 | 47 | 113 | 138 | 51 |
| மொத்தம் | 1430 | 443 | 331 | 151 | 149 | 113 | 144 | 99 |

**பசும்பொன் வீடமைப்புத் திட்டத்தின் குடிநீர் நிகழ்ச்சித்திட்டங்கள் - பிரதேச மட்டத்தில்**

| அனுமதி வழங்கப்பட்ட குடிநீர் நிகழ்ச்சித் திட்டங்கள் | முன்னேற்றம் பிரதேச மட்டத்தில் | | | | | | | மொத்த ஒதுக்கீடு | மொத்த செலவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நுவரெலியா | ஹட்டன் | கண்டி | பதுளை | இரத்தினபுரி | கேகாலை | காலி | | |
| 513 | 179 | 25 | 26 | 91 | 113 | 6 | 73 | 27.06 | 23.64 |



ஹட்டன் பிரதேச காரியாலயத்தினால் முன்னெடுக்கப்பட்ட கொட்டகலை பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான கிறிஸ்லஸ்பாம் தோட்டத்தின் வீடமைப்புத் திட்டம் - பயனாளிகளின் எண்ணிக்கை - 20 மொத்த செலவு 20 மில்லியன் ரூபா



மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

## பசும்பொன் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வீடுகளை நிர்மாணித்தல் பிரதேச மட்டத்தில்

| தொ. இல. | பெருந்தோட்டப் பிரதேசம் | தோட்டக் கம்பனி | தோட்டத்தின் பெயர் | பிரிவு | வீடுகளின் எண்ணிக்கை | பூரணமாக நிறைவு |
|---|---|---|---|---|---|---|
| 01 | காலி | நமுனுகுல | ஹுலந்தாவ | புளுவான | 25 | |
| | | வட்டவளை | கோமதுல | இல 06 | 25 | 25 |
| | | கொட்டகல | ஹெடிகல்ல | துவான | 13 | 13 |
| | | நமுனுகுல | பல்லேகொட - மேல் | மேல் | 10 | 10 |
| | | | பொரஸ்டர் | கோவின்ன | 26 | |
| **மொத்தம்** | | | | | **99** | **48** |
| 02 | இரத்தினபுரி | பலங்கொடை | மாரதென்ன | மாரதென்ன | 31 | |
| | | பலங்கொடை | தெவனகல | தேனதகல | 19 | |
| | | கஹவத்த | ஹாவுபே | யாஇன்ன | 15 | |
| | | பலங்கொடை | பெட்டிகல தொழிற்சாலை மேற்கு(Factory) | மேல் | 48 | |
| **மொத்தம்** | | | | | **113** | **0** |
| 03 | பதுளை | PVT | நீட்வுட் | நீட்வூட் | 11 | 11 |
| | | நமுனுகுல | கோனகலே | கீழ் | 48 | 48 |
| | | | கனவெரல்ல | சீ.வீ.ஈ | 23 | 23 |
| | | ஆகரபத்தன | பிடரத்மலே | மேல் | 20 | 20 |
| | | | | | 47 | |
| **மொத்தம்** | | | | | **149** | **102** |
| 04 | கேகாலை | களனிவெலி | தேவாலகந்தை | தெஹியோவிற்ற | 06 | 6 |
| | | | பானவத்தை | PAN 04 | 26 | |
| | | | களுபஹன | நிர்மல | 9 | |
| | | | களுபஹன | வஹரக | 7 | |
| | | | களுபஹன | களுபஹன | 84 | |
| | | கேகாலை | அட்டலே | நிவ் அரன்தர | 12 | |
| **மொத்தம்** | | | | | **144** | **06** |
| 05 | கண்டி | SLSPC | கோமர | லெபனன் | 19 | 19 |
| | | JEDB | ஹோப் | கீழ் | 25 | 25 |
| | | JEDB | ஹோப் | மேல் | 06 | 06 |
| | | SLSPC | நிகொலய | வேரகம | 14 | 14 |
| | | SLSPC | மிட்லண்ட் | பம்பரகலை | 07 | 07 |
| | | புஸ்ஸல்லாவ | கிராகம | கோணடிகா | 15 | |
| | | கஹவத்தை | கலமுதுன | வின்ட்பெ-ாரஸ்ட் | 11 | |
| | | | கேலபொக்க | ஹுலங்கந்த | 23 | |
| | | | போஹில்/கெடபோல | போஹில் | 16 | |
| | | | கிரய்ஹெட் | கிரேஹெட் | 15 | |
| **மொத்தம்** | | | | | **151** | **71** |
| 06 | ஹட்டன் | பொஹவன்தலாவ | கொட்டியாகல | கீழ் | 184 | |
| | | மஸ்கெலிய | ப்ரவுன்ஸ்விக் | 1st | 25 | |
| | | வட்டவளை | கனில்வொத் | 1st | 03 | 03 |
| | | ஹொரன | டிலிகுல்றி | டிலிகுல்றி | 10 | 10 |
| | | | பம்பரகலே | பம்பரகலை | 20 | 20 |
| | | | மஹநிலு | முாகல | 15 | |
| | | கெளனிவெளி | இன்ஜெஸ்ரி | போட்ரி | 15 | 08 |
| | | கொட்டகலை | மேய்பீல்ட் | மேபீல்ட் | 16 | 16 |
| | | | கிறிஸ்டலாஸ் பாம் | | 20 | 20 |
| | | | ஸ்டோனிக் லீப் | ரொசிட்டா | 23 | |
| **மொத்தம்** | | | | | **331** | **77** |
| 07 | நுவரெலியா | அகரபத்தன | ஹுட்வில் | பென்கடன் | 150 | |
| | | உடபுஸ்ஸல்லாவ | கோட்லொஜ் | கோட்லொட்ச் | 24 | 24 |
| | | தலவாக்கலை | டெஸ்போர்ட் | மேல் | 16 | 16 |
| | | | | லோன் | 15 | 15 |
| | | | | கீழ் | 14 | 14 |
| | | அகரபத்தன | டொரிங்டன் | ஸ்டெயார் | 12 | 12 |
| | | உடபுஸ்ஸல்லாவ | கொன்கோரியா | மேல் | 02 | 02 |
| | | அல்பிட்டிய | டன்சினன் | அக்கரமலை | 23 | |
| | | | சீன் | கீழ் | 18 | 18 |
| | | | | பூண்டுலே-ாயா | | |
| | | | | மேல் | 12 | 12 |
| | | | | பூண்டுலே-ாயா | | |
| | | மதுரட | கபரகல | கீழ் | 10 | 10 |
| | | அல்பிட்டிய | மடகும்பர | மேல் - கீழ் | 23 | |
| | | வட்டவளை | வோல்ட்ரிம் | வோல்ட்ரீம் | 10 | 10 |
| | | கேகாலை | லக்கிலான்ட் | லகிலேன்ட் | 25 | 25 |
| | | மதுரட | மஹஊவா | 2nd | 15 | 15 |
| | | கெளனிவெளி | கிளாசோ | அட்னிவன் | 15 | 15 |
| | | கெளனிவெளி | சமர்செட் | லெங்டேல் | 01 | 1 |
| | | தனியார் | வெவன்டென் | வெவன்டன் | 58 | |
| **மொத்தம்** | | | | | **443** | **189** |
| ***முழு மொத்தம்*** | | | | | **1430** | **493** |







மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

### 8.2.2 இந்திய அரசாங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடமைப்புக் கருத்திட்டம்

இந்திய அரசாங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த கருத்திட்டத்தின் மூலம் தோட்டப்புற சமுதாயத்தினருக்கு 4000 வீட்டு அலகுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. ஒரு வீட்டின் பெறுமதி ஒரு மில்லியன் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த கருத்திட்டத்தின் வீடொன்றுக்கு இந்திய அரசாங்கத்தினால் 950,000ரூபாவும் சம்பந்தப்பட்ட பெருந்தோட்டக் கம்பனியினால் 30,000 ரூபாவும் பயனாளியினால் 20,000ரூபாவும் பங்களிப்பாக வழங்கப்படும். இந்த வீடமைப்புத்திட்டத்திற்குத் தேவையான குடிநீர் வசதிகள், மின்சாரம், உட்பிரவேசப் பாதைகள் உள்ளடங்கலாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இலங்கை அரசாங்கத்தினால் செய்துகொடுக்கப்படும். இதற்காக அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் 2016ஆம் ஆண்டுக்கு ரூபா மில்லியன் 75 ஒதுக்கப்பட்டுள்ளது.

#### 1 ஆம் கட்டம்

இந்த கருத்திட்டத்தின் முதல் கட்டமாக 1134 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கை 2016.04.01ஆந் திகதியன்று இந்திய உயர்ஸ்தானிகருக்கும் கௌரவ அமைச்சருக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டது. அதற்கமைய இதுவரை 1134 வீடுகளை நிர்மாணிப்பதற்காக காணிகளை ஒழுங்குசெய்யும் நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

#### 11 ஆம் கட்டம்

இதன்கீழ் மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மண்சரிவு அபாயத்திற்கு ஆளாகக்கூடிய கடும் அபாயப்பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு 2866 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. சம்பந்தப்பட்ட தோட்டக் கம்பனிகள், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் ஆகியவற்றுடன் இணைந்து அவ்வாறான பிரதேசங்கள் இனங்காணப்பட்டு இந்திய அரசாங்கத்தின் அனுமதிக்காக இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 1134 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான இந்திய உயர்ஸ்தானிகருக்கும் கௌரவ பழனி திகாம்பரம் அமைச்சருக்கும் இடையே உடன்படிக்கை கையொப்பமிடும் நிகழ்வு 2016.04.01





## இந்திய வீடமைப்புத் திட்டத்தின் முதற்கட்டத்தின் முன்னேற்றம்

| பெருந்தோட்ட பிரதேசம் | தோட்டத்தின் பெயர் | பிரிவு | வீடுகளின் எண்ணிக்கை | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| நுவரெலியா | டன்சினன் | மிட்ல் | 404 | நிலத்தை ஒழுங்கமைத்தல், பயனாளிகளை தெரிவுசெய்தல் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன |
| | டயகம | 1ம் & 2ம் | 150 | நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன |
| பதுளை | லெஜர் | லெஜர் | 75 | நிலத்தை ஒழுங்கமைக்கும் பணிகள் நடைபெறுகின்றது |
| | | நாரங்கல | 50 | நிலத்தை ஒழுங்கமைக்கும் பணிகள் நடைபெறுகின்றது |
| கண்டி | ஹெல்பொட | மிட்ல் | 100 | வீடமைப்புத் திட்டத்திற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. |
| ஹட்டன் | பொகவான | பொகவான | 100 | அளவிடல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. |
| | | பிரிட்வேல் | 155 | அடித்தளம் மற்றும் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| | | லின்ஸ்டட் | 100 | அளவிடல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. |



கண்டி பிராந்திய காரியாலயத்தினால் ஹெல்பொட தோட்டத்தில் முன்னெடுக்கப்படும் இந்திய வீடமைப்புத் திட்டம்



ஹட்டன் பிராந்திய காரியாலயத்தினால் பிரிட்வேல் தோட்டத்தில் முன்னெடுக்கப்படும் இந்திய வீடமைப்புத் திட்டம்









### 8.2.3. மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்தல் (2015 ஆம் ஆண்டின் தொடர்ச்சியான கருத்திட்டங்கள்)

ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட அல்லது மண்சரிவு ஏற்படும் கடும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள தோட்டப்புற ஊழியர்களின் 308 குடும்பங்களுக்கு 100 நாள் அரசாங்க வேலைத்திட்டத்தின் கீழ் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 550 சதுர அடி அளவான இந்த ஒரு வீட்டின் பெறுமதி 1.2 மில்லியன் ரூபாவாகும் என்பதுடன் 07 பேர்ச்சஸ் காணி, 02 படுக்கைஅறைகள், சமையலறை, வரவேற்பறை மற்றும் இணைந்ததாக உள்ள குளியலறை, மலசலகூடம் இதில் உள்ளடங்கும்.

2015ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா மில்லியன் 302 செலவிடப்பட்டு இவற்றில் 288 வீடுகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. 2016ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் எஞ்சியுள்ள 20 வீடுகளின் வேலைகளை பூர்த்திசெய்யப்பட்டு பயனாளிகளிடம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.



நுவரெலியா பிரதேச காரியாலயத்தினால் அக்கரபத்தனை பெருந்தோட்டக் கம்பனியின் அல்பியன் தோட்ட ஆட்லோ பிரிவில் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம்
அலகுகளின் எண்ணிக்கை - 10 அங்கிகரிக்கப்பட்ட பெறுமதி :ரூபா.மி - 6.5

### 8.2.4 புதிய வாழ்வு (நவஜீவன) வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடுகளை நிர்மாணித்தல் (2014/2015இன் தொடர்ச்சியான கருத்திட்டம்)

2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புதிய வாழ்வு வீடமைப்புக்கருத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட தோட்டத்துறை குடும்பங்களுக்கு புதிய வீடுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஒரு வீட்டின் பெறுமதி ரூபா 515,000 ஆகும். இந்த பெறுமதியில் 47% அரசாங்க கொடையாகவும் 53% ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்ற கடன் தொகையாகவும் இதில் ஈடுபடுத்தப்படும்.

இதற்கமைய 2014ஆம் ஆண்டு வேலைகள் பூர்த்திசெய்யப்படாதிருந்த 647 வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் இந்த அமைச்சினால் 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவற்றில் 2015 ஆம் ஆணடில் பூர்த்திசெய்யப்படாதிருந்த 336 வீடுகளின் நிர்மாணப்பணிகள் 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. மேலும் 50 வீடுகளின் நிர்மாணப்பணிகள் நடைபெற்று வருகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக அமைச்சினால் 121 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை அதன் நிதிப் பெறுமதி 119 மில்லியன் ரூபாவாகும்.



மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

அதேபோன்று புதிய வாழ்வு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கிடைக்கப்பெற்றுள்ள 328 தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்காக 16 குடிநீர் வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அமைச்சு 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.



இரத்தினபுரி பிராந்திய காரியாலயத்தினால் அகலவத்தை பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான தொரொஸ்வல கொழும்பகம பிரிவின் வீடமைப்புத் திட்டம்
அலகுகளின் எண்ணிக்கை - 30 அங்கிகரிக்கப்பட்ட பெறுமதி :ரூபா.மி. 36

## புதிய வாழ்வு வீடமைப்புத்திட்டம் - பௌதீக முன்னேற்றம் (2014 - 2015 இன் தொடர்ச்சி)

| **பௌதீக முன்னேற்றம்** | **விடுகளின் எண்ணிக்கை (2015இன் தொடர்ச்சி)** | **முன்னேற்றம் - பிரதேச மட்டத்தில்** | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நுவரெலியா | ஹட்டன் | கண்டி | பதுளை | இரத்தினபுரி | கேகாலை |
| பூரணமாக நிறைவு | 336 | 125 | 44 | 40 | 20 | 50 | 57 |
| தொடர்ச்சி | 50 | - | 10 | 40 | - | - | - |
| ***மொத்தம்*** | **386** | **125** | **54** | **80** | **20** | **50** | **57** |



## புதிய வாழ்வு வீடமைப்புக்கருத்திட்டம் தொடர்பில் அமுல்படுத்தப்பட்ட நீர் விநியோக கருத்திட்டங்களின் முன்னேற்றம்

| பிராந்தியம் | அங்கீகரிக்கப்பட்ட நீர் கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பிரதேச பெருந்தோட்டக் கம்பனி | தோட்டம் | பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **காலி** | 03 | நமுனுகுல | வல்பிட்ட | 25 |
| | | ஹொரன | பொஸஸ்டர் | 16 |
| | | நமுனுகுல | சிட்ரஸ் | 20 |
| **பதுளை** | 01 | ஹபுகஸ்தென்ன | ஆதாவன்ன | 20 |
| **இரத்தினபுரி** | 02 | பலாங்கொடை | மெத்தகந்த | 10 |
| | | காவத்தை | ஓபாத | 15 |
| **கண்டி** | 03 | புஸ்ஸல்லாவ | சிடிலம்போக் | 40 |
| | | உடபுஸ்ஸல்லாவ | டக்வரி | 10 |
| | | ளுடுளீஊ | கோமர | 30 |
| **கேகாலை** | 03 | களனிவெளி | களனி | 20 |
| | | மல்வத்தவெளி | மொரஎலிய | 18 |
| | | கேகாலை | உடபொல | 19 |
| **நுவரெலியா** | 04 | அக்கரபத்தனை | நிவ்பொர்ட்நேர்ட் | 30 |
| | | கேகாலை | கம்பஹா | 15 |
| | | கேகாலை | லகீ லேண்ட் | 20 |
| | | களனிவெளி | நுவரெலியா | 20 |
| **மொத்தம்** | 16 | | | 328 |

## 8.3 பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி

மிகவும் குறைவான வசதிகளின் கீழ் வாழ்ந்துவரும் தோட்டத்துறை மக்களுக்கு குடிநீர் கருத்திட்டங்களை ஏற்படுத்தல், மலசலகூட வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல், உட்பிரவேசப் பாதைகளை புதுப்பித்தல், லைன் அறைகளில் கூரைகளை மீண்டும் பொருத்துதல், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணித்தல், போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் இதன்கீழ் அமுல்படுத்தப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக திடீர் அனர்த்த நிலைமைகளுக்கு ஆளான தோட்டப்புற சமுதாயத்தினருக்கு தற்காலிக இருப்பிடங்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல் மற்றும் அதற்குத் தேவையான வசதிகளை செய்வதற்கான இடைக்கால நடவடிக்கைகளும் இதன்கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

பின்தங்கிய பிரதேசங்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக அமைச்சினால் 2016ஆம் ஆண்டுக்கு 200 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதன்கீழ் 2015ஆம் ஆண்டின் இறுதிக்காலாண்டில் அங்கீகரிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அந்த ஆண்டுக்குள் பூர்த்தி செய்ய முடியாதுபோன கருத்திட்டங்களுக்கு சுமார் 78 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2015ஆம் அண்டின் தொடர்ச்சியான கருத்திட்டங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள்.

| கருத்திட்டத்தின் தன்மை | கருத்திட்டம் /அலகுகளின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட தொகை (ரூ.மி) | 2016/12/31 ஆந் திகதிக்கு செலவினம் (ரூ.மி) | பௌதீக |
|---|---|---|---|---|
| கூரைகளை மீளப்பொருத்தல் | 700 | 12.00 | 11.99 | |
| நீர் கருத்திட்டம் | 19 | 6.65 | 6.65 | |
| சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் அபிவிருத்தி | 21 | 5.10 | 5.11 | |
| வீதி அபிவிருத்தி கருத்திட்டங்கள், விளையாட்டு மைதானங்கள், பாடசாலை வசதிகளை அபிவிருத்தி செய்தல், சமய வழிபாட்டுத் தலங்களின் அபிவிருத்தி, விளையாட்டு வசதிகளை மேம்படுத்தல், ஏனையன (பாதுகாப்பு மதில்கள் போன்றன) | 92 | 54.55 | 54.68 | 100 |
| ***மொத்தம்*** | | 78.30 | 78.43 | 100 |



ஹட்டன் பிரதேச காரியாலயத்திற்குற்பட்ட கொட்டகலை பெருந்தோட்ட கம்பனியின் யுலிபீல்ட் தோட்ட வெலிங்டன் பிரிவுக்கு செல்லும் பாதை புனரமைப்பு
அங்கிகரிக்கப்பட்ட பெறுமதி : 0.9 மில்லியன் ரூபா



## 8.3.1 2016 ஆம் ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றின் முன்னேற்றமும்

### 8.3.1.1 வாழ்வதற்கு பொருத்தமற்ற நிலையில் உள்ள 905 லைன் அறைகளின் கூரைகளை மீளப்பொருத்துதல்

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்கு உரித்தான 07 பிராந்தியங்களில் அமைந்துள்ள மிகவும் மோசமாக சேதமடைந்துள்ள 905 லைன் அறைகளின் கூரைகளை மீளப்பொருத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொள்கின்றது. புதிய வீடுகளை நிர்மாணிப்பது நீண்டகால கருத்திட்டமாக இருப்பதனால் இடைக்கால நடவடிக்கையாக இந்த கருத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. 2016 டிசெம்பர் மாதம் வரை அமைச்சினால் இதற்கென 60 மில்லியன் ரூபாவான தொகை பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக திடீர் அனர்த்த நிலைமைகளை எதிரநோக்கிய தோட்டத்துறை மக்களுக்கென தற்காலிக இருப்பிடங்களை நிர்மாணிப்பதற்கு சுமார் 18 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க கூரைத்தகடுகள் 11,292 நுவரெலியா, ஹட்டன், கோகாலை, பதுளை, இரத்தினபுரி, ஆகிய பெருந்தோட்ட பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.




நுவரெலியா பிரதேச காரியாலயத்தினால் ஜே.ஈ.டீ.பீ கம்பனிக்கு சொந்தமான நோர்வூட் தோட்டத்தில் லைன் இலக்கம் 4 இன் கூரைத் தகடுகள் மாற்றப்பட்டுள்ளன.

### 8.3.1.2 சுகாதார ரீதியிலான பாதுகாப்பான குடிநீர் வசதிகள்

தோட்டத்துறை குடியிருப்புக்கள் அமைந்துள்ள மலைநாட்டுப் பிரதேசத்தில் நீரூற்றுக்கள் பல ஆரம்பமாகின்ற போதிலும் சுகாதார ரீதியில் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை பெற்றுக்கொள்ளும் நிலைமையை தோட்டத்துறை மக்கள் மிக அரிதாகவே பெற்றுள்ளனர்.

நீர் விநியோகம் பாதுகாப்பற்றதாக உள்ளமை காரணமாக நீரினால் பரவுகின்ற வாந்திபேதி போன்ற பல நோய்களுக்கு ஆளாகும் அபாயநிலை தோட்டத்துறை சமுதாயத்தின் மத்தியில் காணப்படுவதனால் அவ்வாறு இனங்காணப்பட்ட பிரதேசங்களை இலக்காகக் கொண்டு நீர் விநியோக கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்திசெய்ய முடியாது போன 19 நீர் விநியோக கருத்திட்டங்களின் வேலைகள் 2016 டிசெம்பர் மாத இறுதிக்குள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. அவ்வாறே இந்த ஆண்டில் 27 கருத்திட்டங்களை ஆரம்பித்து அமுல்படுத்துவதற்கு இந்த அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன் அதன் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 7 மில்லியன் ஆகும்.. இதில் 23 கருத்திட்டங்கள் முற்றாக நிறைவடைந்துள்ளது.

## பின்தங்கிய பிரதேசங்களுக்கு நீர் வழங்கும் கருத்திட்டங்களை அமுல்படுத்தல் (2016 செப்டெம்பர் 30 ஆந் திகதிக்கான பௌதீக முன்னேற்றம்)

| பௌதீக முன்னேற்றம் | நீர் கருத்-திட்டங்களின் எண்ணிக்கை | முன்னேற்றம் - பிரதேச மட்டத்தில் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நுவரெலியா | ஹட்டன் | கண்டி | பதுளை | இரத்தினபுரி | கேகாலை | காலி |
| 100 % நிர்மாணிப்புக்கள் பூர்த்தி | 23 | 01 | 01 | 05 | 12 | 01 | 02 | 01 |
| அமுல்படுத்தப்பட்டு வருபவை | 04 | - | - | - | 01 | 02 | 01 | - |
| மொத்தம் | 27 | 01 | 01 | 05 | 13 | 03 | 03 | 01 |



காலி பிராந்திய காரியாலயத்தினால் முன்னெடுக்கப்படும் நமுனுகுல பெருந்தோட்ட கம்பனியின் பல்லேகொட தோட்டத்தின் குடிநீர் கருத்திட்டம்.
பெறுமதி - 0.6 மில்லியன் ரூபா

### 8.3.1.3 சுகாதார வசதிகளை செய்துகொடுத்தல்

தரவு ஆய்வு அறிக்கைகளுக்கமைய தோட்டப்புற சமுதாயத்தில் 25□ற்கும் மேற்பட்டவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் கிடைக்கவில்லை என்பது தெரியவருகின்றது. லைன் அறைகளில் வாழ்ந்துவருகின்ற மேற்படி மக்களுக்காக போதியளவு சுகாதார வசதிகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் 2016ஆம் ஆண்டில் இந்த அமைச்சினால் 542 மலசலகூடங்கள் புதிதாக நிர்மாணிக்கப் பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிர்மாணிப்புகளை தோட்ட ஊழியர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக மேற்கொள்ளப் படுவதுடன் மலசலகூடங்களுக்கான குழிகளை வெட்டுவது போன்ற நடவடிக்கைகளுக்கு பயனாளிகளின் பங்களிப்பு வழங்கப்படுகின்றது. ஒரு அலகுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 50,000 ஆகும். அதற்கமைய 2016 டிசம்பர் மாதம் 30ஆந் திகதிக்கு இதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா மில்லியன் 7 ஆகும்.



## 2016 மலசலகூடம் நிர்மாணிப்பதன் முன்னேற்றம் - பிரதேச மட்டத்தில்

| பௌதீக முன்னேற்றம் | மலசலகூடங்க-ளின் எண்ணி-க்கை | முன்னேற்றம் - பிரதேச மட்டத்தில் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நுவரெலியா | கண்டி | பதுளை | இரத்தினபுரி | கேகாலை | காலி |
| 100 % நிர்மாணிப்புக்கள் பூர்த்தி | 532 | 10 | 157 | 145 | 120 | 55 | 45 |
| அமுல்படுத்தப்பட்டு வருபவை | 10 | - | - | - | - | - | 10 |
| மொத்தம் | 542 | 10 | 157 | 145 | 120 | 55 | 55 |




கேகாலை பிரதேச காரியாலயத்தினால் எல்பிடிய பெருந்தோட்ட கம்பனியின் அந்துருபொல தோட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மலசலகூட கருத்திட்டம்
மலசலகூட அலகுகளின் எண்ணிக்கை : 10
அங்கிகரிக்கப்பட்ட பெறுமதி : ரூபா மில்லியன் 0.5

### 8.3.1.4 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணித்தல் / நவீனமயப்படுத்தல்

பெருந்தோட்டத்துறையில் தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள சமுதாயத்தினரின் குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு வயதுக்கு குறைவான சிறுவர்களைக் கண்காணித்தல் மற்றும் 3-5 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கு பாடசாலைக் கல்வியை பயிற்றுவித்தல் ஆகிய பணிகள் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற போதிலும். இடவசதிகள் பற்றாக்குறையாக உள்ளமை, உபகரணங்கள் பற்றாக்குறையாக உள்ளமை, முறையான பராமரிப்பு இன்மை போன்ற விடயங்களின் காரணமாக தரப்படுத்தல் வகைப்படுத்தலுக்கமைய இம்முறை தரப்படுத்தலில் மிகவும் கீழ்மட்டத்தை இது வெளிப்படுத்தியுள்ளது. எனவே அவ்வாறு இனங்காணப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றுக்கு பொருட்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக 2016ஆம் ஆண்டு டிசெம்பர் வரை அமைச்சு செலவிட்டுள்ள ஒட்டுமொத்த தொகை ரூபா மில்லியன் 4.5 ஆகும்.




கண்டி பிரதேச காரியாலயத்தினால் முன்னெடுக்கப்பட்ட புஸ்ஸல்லாவ பெருந்தோட்ட கம்பனியின் ரொச்சயில்ட் தோட்ட கிளன்லொட்ச் பிரிவில் முன்னெடுக்கப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலைய அபிவிருத்தி கருத்திட்டம் பெறுமதி 1.6 மில்லியன் ரூபா

### 8.3.1.5 உட்பிரவேசப்பாதைகள் / பொது வசதிகள் அபிவிருத்தி

பெருந்தோட்ட சமுதாயத்தை இலக்காகக் கொண்டு குறிப்பாக முறையான உட்பிரவேசப் பாதைகள் இல்லாத இடங்களுக்கான உட்பிரவேசப்பாதைகளை பெற்றுக்கொடுத்தல், ஏறுபாதைகள் மற்றும் வடிகாலமைப்புகளை அபிவிருத்தி செய்தல், பாதுகாப்பான மதில்களை நிர்மாணித்தல், பாடசாலைகள், ஆய்வுகூடங்கள், விளையாட்டு வசதிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவர்களின் அன்றாட வாழ்க்கையை வழமைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான வேறு வசதிகள் விசேடமாக சமய மற்றும் கலாசார நிலையங்களை மேம்படுத்தல், நலன்புரிச் சங்கங்களுக்கு கூடாரங்கள் மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொடுப்பது இதன்கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

## பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய 2016ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட புதிய கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | அமுல்படுத்தும் நிறுவனம் | | மொத்த கருத்-திட்டங்கள் /அலகுகள் | 2016.02.31 ஆந் தி-கதிக்கு வேலைகள் பூர்த்தி | அங்கீகரி-க்கப்பட்ட தொகை (ரூ.மி) | 2016.12.31 ஆந் திகதிக்கான செலவினம் (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|
| | PHDT | D.S. O/P.S | | | | |
| நீர் விநியோகம் | ✓ | ✓ | 27 | 23 | 6.70 | 6.72 |
| மலசலகூடம் நிர்மாணித்தல் | ✓ | | 542 | 532 | 25.13 | 23.86 |
| வீதி அபிவிருத்தி கருத்-திட்டங்கள் | ✓ | | 905 | 905 | 60.0 | 60.04 |
| விளையாட்டு மைதானங்கள் சமய / கலாசார நிலையங்க-ளின் அபிவிருத்தி கூரைகளை மீளப்பொருத்தல் ஏனையன(பாடசாலை/பாலர் பாடசாலை/ சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் அபிவிருத்தி) | ✓ | ✓ | 108 | 83 | 55 | 54.8 |
| ***மொத்தம்*** | | | | | ***146.83*** | ***145.42*** |



## அமைச்சினால் 2016 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட கருத்திட்டங்கள்












மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு






## 8.4 வாழ்வாதார வசதிகளை மேம்படுத்தல்

தோட்டப்புற சமுதாயத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கான ஐந்து வருட செயற்றிட்டத்தில் பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டுள்ள மேம்படுத்தப்பட வேண்டிய துறைகளாக இனங்காணப்பட்டிருக்கின்ற சுகாதாரமும் போஷாக்கும், திறன் அபிவிருத்தியும் தொழிற்பயிற்சியும், சமுதாய வலுவூட்டல் (பெண்கள் மற்றும் இளைஞர் யுவதிகள்) ஆகிய துறைகளை மேம்படுத்தத் தேவையான அறிவுறுத்தல், தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல், உபகரணங்களையும் வசதிகளையும் பெற்றுக்கொடுத்தல் உள்ளடங்கலாக சமூக வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் பல இதன்கீழ் அமுல்படுத்தப்படுகின்றன.

தேசிய செயற்றிட்டத்திற்கு அமைவாக ஒவ்வொரு துறையின்கீழும் தோட்டப்புற சமுதாயத்தினருக்கு விசேடமான நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த அமைச்சுடன் ஒருங்கிணைப்புச் செய்து ஏனைய அமைச்சுக்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

### 8.4.1 சமுதாயத்தை அறிவுறுத்தல்

மேன்மைதங்கிய ஜனாதிபதியின் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள தேசிய தேவையொன்றாக கருதப்படுகின்றதும் சுகாதாரம் மற்றும் போஷாக்கு நிலைமையை மேம்படுத்தல், சிறுநீரக நோயை கட்டுப்படுத்தல், போதைவஸ்து ஒழிப்பு, சுற்றாடல் பாதுகாப்பு போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி தோட்டப்புற சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்காக 2016 டிசெம்பர் மாதம் வரை ரூபா மில்லியன் 3 ஆன ஏற்பாடுகள் இந்த அமைச்சினால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தோட்டப்புற பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் பிரதேச செயலாளர் பிரிவுகள் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் அதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் அமைச்சினால் மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பெருந்தோட்ட சமுதாய தொடர்பாடல் வசதியளிப்பு அலுவலர்களின் தலைமையில் மேற்கொள்ளப்படுகின்றன.


சமுதாயத்தை அறிவுறுத்தம்
நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்



### 8.4.2 வீட்டுத்தோட்டம் மற்றும் உணவுப்பாதுகாப்பு

பெருந்தோட்ட சமுதாயத்தின் போஷாக்கு நிலைமையை மேம்படுத்தல், இரசாயன பொருட்கள் பயன்படுத்துவதைக் குறைத்தல், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் வீட்டுத்தோட்டங்களை அமைப்பதில் சமுதாயத்தின் பங்கேற்றலையும் கவனத்தையும் கோரும் நோக்கத்துடன் தோட்டத்துறை மக்களுக்கு வழங்கப்பட்ட புதிய வீடமைப்புக் கருத்திட்டங்களை மையமாகக்



மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

கொண்டு வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான அறிவு, உபகரணங்கள், பயிர்கள் மற்றும் விதைகளைப் பெற்றுக்கொடுப்பது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. உரிய பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் ஊடாக சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கென 2016ஆம் ஆண்டுக்கு ரூபா மில்லியன் 05 ஆன தொகை ஒதுக்கப்பட்டிருப்பதுடன் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா மில்லியன் 4 ஆகும்.

### வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை மற்றும் உணவுப்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயன்களை பெற்றுக்கொடுத்தல் - பிரதேச மட்டத்தில்

| மொத்தப் பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை | PHDT பிராந்தியம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஹட்டன் | இரத்தினபுரி | காலி | கேகாலை | பதுளை | கண்டி |
| 1176 | 136 | 132 | 207 | 125 | 76 | 500 |



### 8.4.3 சுய தொழில் வாய்ப்புக்கள்

இந்த அமைச்சானது பெருந்தோட்ட சமுதாயத்தினரின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக சுய தொழிலினை ஆரம்பிப்பதற்கான நீண்ட காலமாக இயக்கமற்றிருந்த சுழற்சி முறை கடன் திட்டத்தை மீள் இயக்கும் முகமாக இலங்கை வங்கியுடன் மீள் சுழற்ச்சிக்கடன் வசதிகளை வழங்குவதற்கு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட்டது.

இதற்கமைவாக ஆரம்ப கட்டமாக நுவரெலியா மற்றும் ஹட்டன் பெருந்தோட்ட பிராந்தியத்திலிருந்து 16 பயனாளிக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தலா ரூபா 100,000.00 இனை கோழிவளர்ப்பு, ஆடை தைத்தல், கணினி பழுது பார்த்தல் மற்றும் மரக்கறி பயிரிடல் போன்ற சுய தொழில்களுக்கான கடனுதவியாக 2016 ஆகஸ்ட் 04ஆந் திகதி வழங்கப்பட்டது.

சுயதொழில் முயற்சியை மேம்படுத்துவதற்காக மேலதிக கடன்வசதிகளை இலங்கை வங்கியினூடாக வழங்குகின்ற அதே சந்தர்ப்பத்தில் தேவையான பயிற்சிகளை உரிய நிறுவனங்களினூடாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தினை விரிவாக்கும் முகமாக பயனாளிகளின் தெரிவு தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.



### 8.4.4. திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி

பாடசாலை, பாடசாலைக் கல்வியை விட்டு விலகிச்செல்லும் மற்றும் பயிற்றப்படாத ஊழியர்களை முறையான வாழ்வாதார முறை ஒன்றுக்கு பழக்கப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் பயிற்சியைப் பெற்றுக்கொடுப்பதற்காக இந்த அமைச்சின் விடயப்பரப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் பிரஜா சக்தி கருத்திட்டத்தின் மூலம் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

அதற்கமைய தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்தத் தேவையான மனித மற்றும் தொழில்நுட்ப பயிற்சி வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு 2016ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 103 ஆன தொகை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் ஒதுக்கப்பட்டது.

எவ்வாறாயினும் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் எதிர்நோக்கியிருந்த நிதிசார் நெருக்கடிகள் காரணமாக மேற்படி தொகை அதன் ஊழியர்களது சம்பளம் மற்றும் நிர்வாக செலவினங்களுக்கு செலவிடப்பட்டதுடன் 2016 செப்டெம்பர் 30ஆந் திகதிவரை இதற்காக அமைச்சினால் ரூபா மில்லியன் 76 செலவிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நிதி நெருக்கடி மற்றும் அமைச்சு மாற்றங்கள் காரணமாக இடைநடுவே கைவிடப்பட்டிருந்த பயிற்சிப் பாடநெறிகள் 2016ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது சுமார் 135 மாணவர்கள் இங்கு பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.




தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பயிற்சிப் பாடநெறிகளை மீண்டும் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு - 20.03.2016




தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பாடநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிவைக்கும் நிகழ்வு - 29.04.2016



தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு அமைச்சரின் வெளிக்களவிஜயம



# 9. அமைச்சினால் 2016ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட விசேட வெற்றிகள்

9.1 பெருந்தோட்ட சமுதாயத்தினரின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான ஐந்துவருட (2016-2020) தேசிய செயற்றிட்டத்தை வெளியிடல்

9.2 சௌமியமூர்த்தி தொண்டமான் மன்றத்தின் கீழ் காணப்பட்ட நிதி நெருக்கடி காரணமாக ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாதிருந்த ஹட்டன் - பூல்பேங்கில் அமைந்துள்ள தொண்டமான தொழிற்பயிற்சி நிலையம், நோர்வூட்டில் அமைந்துள்ள விளையாட்டு வளாகம், ரம்பொடவில் அமைந்துள்ள கலாசார நிலையம் மற்றும் பிரஜா சக்தி நிலையங்களை அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பொறுப்பேற்றுக்கொண்டமையும் இற்றைப்படுத்தியமையும் ஊழியர்களுகான நிலுவைச் சம்பளங்களை வழங்கியமையும்.

9.3 இந்திய அரசாங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் தோட்டத்துறை ஊழியர்களுக்கான 4000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசாங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை.

9.4 வாழ்வாதார அபிவிருத்திக்கான சுழல் நிதியத்தை மீண்டும் இயங்கும் நிலைக்கு கொண்டுவந்தமை

9.5 தோட்டப்புற சமுதாயத்தினருக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான புதிய அதிகாரசபை ஒன்றைத் தாபிக்கத்தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டமையும் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டமையும்

9.6 உலக வங்கி உதவித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி மற்றும சுகாதார வசதி, குடிநீர் வழங்கும் கருத்திட்டத்தை கண்காணிப்புச் செய்தல்.



எங்கள் வெற்றியின் பங்காளர்கள்



மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு





# 10. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்

## 10.1 பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்

### 10.1.1 பின்னணி

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமானது பெருந்தோட்டத்துறையில் வாழும் மக்களின் வாழ்வாதார வழிமுறைகளை மேம்படுத்துவதற்காக முதலில் - தோட்டப்புற வீடு மற்றும் சமூக அபிவிருத்தி நிதியம் - என்ற பெயரிலான ஒரு நிறுவனமாக 1982இன் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1992 செப்டெம்பர் மாதம் 18ஆந் திகதி தாபிக்கப்பட்ட கம்பனியொன்றாகும். இந்த நிறுவனம் பின்னர் 2002 ஒக்டோபர் மாதம் 25ஆந் திகதி - பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் - என பெயர்மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டது. தற்போது இந்த நிதியம் 2007ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

- தோட்டப்புற சமுதாயத்தின் லைன் அறைகளுக்கு பதிலாக சுய உரித்தைக் கொண்ட தனி வீடுகளை தகுதிவாய்ந்த ஆட்களுக்கு பெற்றுக்கொடுத்தல்
- பழைய லைன் அறைகளை புதுப்பித்தலும் அவற்றின் கூரைகளை மீளப்பொருத்தலும்
- நீர் விநியோகம் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தல்
- சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை தாபித்தல் மற்றும் தகுதிவாய்ந்த சிறுவர் அபிவிருத்தி அலுவலர்களை அறிமுகம் செய்தல்
- சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல் (வீதி / கட்டிடம் / சமய நிலையங்கள் போன்றன)
- சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளும்
- சந்தைப்படுத்தல் வசதிகளுக்கான நடவடிக்கைகளை செய்துகொடுத்தல்

### 10.1.2 பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம் - நிறுவன ஒழுங்கமைப்பும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும்

#### 10.1.2.1 நிறுவன ஒழுங்கமைப்பு

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமானது மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது. இது பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் வாழ்க்கை நிலைமையை கட்டியெழுப்பும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்து அதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதற்காக செயற்படுகின்ற, இலங்கைஅரசு, பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் தோட்டத்துறை தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய முத்தரப்பினரைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் தோட்டத்துறை தொழிலாளர்களின் நலனுக்கான உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை அமுல்படுத்தும்போது அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், தொழிற்சங்கள்,

பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் வேறு உள்நாட்டு அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கௌரவ அமைச்சரினால் நியமனம் செயயப்படுகின்ற தவிசாளர் மற்றும் இலங்கை அரசாங்கம், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளைக் கொண்ட பணிப்பாளர் சபையின் கீழ் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் இயங்கிவருகின்றது. காலி, இரத்தினபுரி, பதுளை, கேகாலை, கண்டி, ஹட்டன் மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்கள் 7இன் ஊடாக தலைமை அலுவலகத்தின் நடவடிக்கைகள் வலுவூட்டப்படுகின்றன. பிராந்திய பணிப்பாளர் சம்பந்தப்பட்ட பிராந்திய அலுவலகத்திற்கு தலைமை தாங்குவதுடன் தொழில்நுட்ப நிதிசார் மற்றும் முகாமைத்துவப் பதவியணியினர் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின்
பிராந்திய ஒழுங்கமைப்பு








#### 10.1.2.2 சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் - தோட்டத்துறை ஊழியர்களின் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கம்

தோட்டத்துறை ஊழியர்களின் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவுத் திணைக்களத்துடன் இணைந்து 1993இல் தாபிக்கப்பட்டது. பிரதானமாக வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக தாபிக்கப்பட்டுள்ள இந்த சங்கங்கள் தற்போது பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளால் நிர்வகிக்கப்படுகின்ற 435 தோட்டங்களை மையமாகக் கொண்டு இயங்கிவருகின்றன. தற்போது தோட்ட ஊழியர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் 418 நாடுமுழுவதிலும் (பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற கம்பனிகளை மையமாகக் கொண்டு) தாபிக்கப்பட்டுள்ளன. மிகவும் வலுவான அனுசரணை காணப்படுகின்ற பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் தோட்டங்களை மையமாகக் கொண்டு தாபிக்கப்பட்டுள்ள இந்த கூட்டுறவுச் சங்கங்களில் பல பெரும்பாலானவை முன்னோடி சமுதாய அடிப்படையிலான அமைப்புகளாக நாட்டில் தாபிக்கப்பட்டுள்ளன. இவை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பிராந்திய அலுவலகங்களின் கண்காணிப்பின் கீழ் தகவுதிறன்களின் அடிப்படையிலான உயர் தரப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை தொடர்ச்சியாக கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த சங்கங்கள் தோட்ட ஊழியர் வீடமைப்புக் கூட்டுறவுச்சங்க வங்கி என்ற பெயரில் அவர்களினது வங்கியின் ஊடாக தமது நிதியை உழைத்துக்கொள்வதுடன் கடன் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

கடன் வழங்குவதற்கு மேலதிகமாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி தோட்டங்களில் வசிக்கின்ற வசிப்பாளர்களுக்கு அவர்களின் சேவைசார் தேவைகளுக்கான இலகு அணுகுமுறைகளை செய்துகொடுத்து தோட்ட ஊழியர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்கள் சில்லறை பொருட்கள், நலன்புரி வர்த்தக நிலையங்கள், சிகை அலங்கார நிலையம், தொடர்பாடல் நிலையங்கள் போன்ற வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வசதி செய்துள்ளது. தோட்ட வீட்டு உரிமையாளர்களின் வாழ்க்கைத்தரம், அவர்களின் சுகாதாரம், போஷாக்கு, சுகாதார வசதி மற்றும் சுத்தம் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு அவர்களுக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் இலகுவாக அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு தோட்ட ஊழியர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்களை தமது துணைப்பிரதிநிதிகளாக பயன்படுத்தி பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் பல்தேசிய கம்பனிகள் மற்றும் வேறு முன்னோடி தனியார் துறை அமைப்புக்களுடன் கூட்டாக செயற்படுகின்றன.

### 10.1.3 இந்த அமைச்சின் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய கருத்திட்டங்கள்

#### 10.1.3.1 முன்பள்ளிப்பருவ சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

உலக வங்கியின் உதவித்திட்டத்தின் கீழ் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் இணைந்து முன்பள்ளிப்பருவ அபிவிருத்திக்கான ஐந்து வருட கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஒட்டுமொத்த முதலீடு சுமார் 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். பெருந்தோட்டப் பிரதேசங்களில் வாழும் வயது 3 - 5 வயதிற்கு இடைப்பட்ட சிறுவர்களின், சிறுவர் அபிவிருத்தி நடவடிக்கைகளை போதியளவிலும், தரமாகவும் மேம்படுத்தவது இதன் நோக்கமாகும் என்பதுடன், இது 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளது.

இதன்கீழ் கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் உபகரணங்கள் சகிதம் நிர்மாணிக்க

உத்தேசிக்கப்பட்டுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை 140 ஆகும் என்பதுடன், தற்போது பெருந்தோட்டப் பிரதேசங்களில் மேம்படுத்தப்படவுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை 175 ஆகும். மேலும் தேவையான உபகரணங்களுடன் புதிதாக 175 விளையாட்டு மைதானங்கள் நிர்மாணிக்கப்படுவதுடன், தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள 210 விளையாட்டு மைதானங்களை புதுப்பிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் ஆசிரியர்கள் / உதவி ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் பெற்றோரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டில் ஏழு பெருந்தோட்டப் பிராந்தியங்களில் புதிதாக 28 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணிக்கவும், 35 நிலையங்களை மேம்படுத்தவும் தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், 42 விளையாட்டு மைதானங்களை நிர்மாணிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறுவர் அபிவிருத்தி அலுவலர்கள் 206 பேருக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. மேலும், முதல் தடவையாக சனத்தொகை, புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்து பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பான கணக்கெடுப்பை நடாத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

### 10.1.3.2 கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம்

உலக வங்கியின் உதவியின் கீழ் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சுடன் இணைந்து பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் நுவரெலியா மற்றும் ஹட்டனில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 15,800 வீட்டு அலகுகளை இலக்காகக் கொண்டு கிராமிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் 130 உம், 7,300 வீட்டு அலகுகளை இலக்காகக் கொண்டு மலசலகூடங்களும் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்தக் கருத்திட்டத்திற்கான ஒட்டுமொத்த செலவினம் 14 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளது.

இதன் கீழ் 2016 ஆம் ஆண்டு முதற் கட்டத்தின் கீழ் 9,740 வீட்டு அலகுகளுக்கு பயன்களைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் 35 நீர் வழங்கும் திட்டங்கள் நுவரெலியா, ஹட்டன் மற்றும் கண்டி பிராந்தியங்களில், 12 கருத்திட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன. தற்போது இவற்றுக்கான சாத்தியக்கூறு அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் சம்மந்தமான உலக வங்கி பிரதிநிதிகளின் கலந்துரையாடல்





### 10.1.3.3 சமுதாய, சுகாதார மற்றும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டம்

பல தசாப்தங்களாக தோட்டத்துறை சமுதாயத்தினருக்கு சுகாதார மற்றும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் நோக்கு மற்றும் செயற்பணிக்கு அமைய செயற்பட்டு தோட்டத்துறை சமுதாயத்தினருக்கு மென்மேலும் சிறந்த சுகாதார நிலைமையை உருவாக்கிக்கொடுப்பதற்கும் அவர்களை உடல் உள மற்றும் ஆன்மீக ரீதியில் அபிவிருத்தி செய்து வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான ஒருங்கிணைப்பையும் வசதிகளையும் செய்துகொடுக்கும் பிரதான செயற்பணி பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய தோட்டத்துறை சமுதாயத்தின் சுகாதார மற்றும் போஷாக்கு நிலைமைகளில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துகொள்ளச் செய்யும் ஆற்றல் உருவாகியுள்ளது.







மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

### தோட்டப்புற சமுதாயத்தின் சுகாதாரம் மற்றும் போஷாக்கு நிலைமை 2013 - 2015

| சுட்டி | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| சனத்தொகை | 977,781 | 983,306 | 998,484 |
| சிசு மரணம் | 150 | 133 | 70 |
| தாய் மரணம் | 15 | 18 | 4 |
| குறைநிறையுடனான பிறப்பு | 2,792 | 2,103 | 2,083 |
| உயிருடன் பிறப்பு | 13,319 | 12,312 | 12,028 |
| உயிரிழந்து பிறப்பு | 153 | 133 | 107 |
| சிறுவயதில் கர்ப்பமடைதல் | **969** | **640** | **614** |

**Source:** PHDT Annual Health Return - 2016







## 10.2 சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் காணப்பட்ட நிறுவனங்கள்

### பின்னணி

சௌமியமூர்த்தி தொண்டமான் மன்றத்தின் கீழ் செயற்பட்ட ஹட்டன் பூல்பேங்கில் உள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம், நோர்வூட்டில் அமைந்துள்ள விளையாட்டு வளாகம், ரம்பொடவில் அமைந்துள்ள கலாசார நிலையம் மற்றும் பிரஜா சக்தி நிலையங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் 2016.07.20ஆந் திகதி முதல் இந்த அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பொறுப்பேற்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

### 10.2.1 ஹட்டன் - பூல்பேங்கில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம்

தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழ் காணப்பட்ட இந்த நிலையம் 2007 மார்ச் மாதம் தொண்டமான் மன்றத்தின் முகாமைத்துவத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. இலங்கையில் அமைந்துள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஊடாக இந்திய அரசாங்கத்தின் நிதி அனுசரணையின் கீழ் விசேட பயிற்றுவிப்பாளர்கள் 7 பேரின் சேவை அப்போது இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இவர்களில் 4 பேரின் சேவை தொடர்ந்தும் கிடைத்துவருகின்றது. சில பாடநெறிகள் உள்நாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் எதிர்நோக்கியிருந்த நிதி நெருக்கடி காரணமாக கடந்த ஆண்டில் அதன் பாடநெறிகளை முறையாகப் பேணிவருவதில் அசௌகரியங்கள் எழுந்திருந்த போதிலும் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் கீழ் 2016ஆம் ஆண்டில் மேலும் மேற்படி பாடநெறிகளை ஆரம்பிக்க வாய்ப்புக்கிடைத்தது. அதற்கமைய 2016 மார்ச் மாதம் 10ஆந் திகதி இந்த பாடநெறிகளை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2016 ஆம் அண்டில் பல்வேறு பயிற்சி பாடநெறிகளுக்கு பதிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 252 ஆகும். 04 மாத பயிற்சி காலத்தைப் பூர்த்தி செய்துள்ள (மார்ச் - ஜூன்) மாணவர்களின் எண்ணிக்கை 59 ஆகும். இவர்களில் 44 பேருக்கு தொழில்சார் பயிற்சிகளைப் பெறும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதற்கு மேலதிகமாக 02 வருடங்களின் பின்னர் இதுவரை பயிற்சிப்பாடநெறிகளை பூர்த்தி செய்திருந்த மாணவர்கள் 457 பேருக்கு சான்றிதழ்களை வழங்கிவைக்கும் நிகழ்வு 2016 ஏப்ரல் மாதம் 29ஆந் திகதி இடம்பெற்றது.

தொழிற்பயிற்சிக்கு மேலதிகமாக தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களின் மேலதிக அறிவை வளர்க்கும் வாய்ப்பும் உருவாக்கிக்கொடுக்கப்பட்டுள்ளது. க.பொ.த (உ/த) பாடவிதானத்தில் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ள பொறியியல் தொழில்நுட்ப விடயத்திற்கு தமிழ்மொழி மூலம் வகுப்புகளை நடாத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய நோர்வூட், கொட்டகலை, பதுளை, மாத்தளை, மற்றும் புஸ்ஸல்லாவை ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இந்த பயிற்சிகளைப் பெறும் வாய்ப்பு உரித்தாகியுள்ளது. க.பொ.த. (உ/த) பரீட்சையில் மாவட்டத்தின் முதலாம் இடத்தை மேற்படி பயிற்சிபெற்ற நோர்வூட் தமிழ் மகாவித்தியாலயத்தின் மாணவர் ஒருவர் பெற்றுக்கொண்டுள்ளமை விசேட நிகழ்வாகும். அவ்வாறே, சுற்றுப்புறத்திலுள்ள பல பாடசாலைகளில் க.பொ.த (சா/த) மாணவர்களும் அவர்களின் விஞ்ஞானப்பாட அறிவையும் தொழில்நுட்ப ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்வதற்கும் இந்த நிறுவனத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.





மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

### ஹட்டன் - பூல்பேங்கில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பல்வேறுபட்ட கற்கைநெறிகளுக்காக 2016 ஆம் ஆண்டு பதிவுசெய்திருந்த மாணவர்களின் விபரம்

| இல | பாடநெறி | பதிவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மார்ச் - டிசெம்பர் 2016 | | | மார்ச் - ஜுன் | | | ஜுலை - டிசெம்பர் 2016 | | |
| | | ஆண் | பெண் | மொத்-தம் | ஆண் | பெண் | மொத்-தம் | ஆண் | பெண் | மொத்-தம் |
| 1 | மோட்டார் தொழில்நுட்பவியலாளர் | 12 | - | 12 | - | - | - | - | - | - |
| 2 | மின் நுட்பவியலாளர் | 14 | - | 14 | - | - | - | - | - | - |
| 3 | தொழில்நுட்ப கலைஞர் | 13 | - | 13 | - | - | - | - | - | - |
| 4 | வானொலி தொலைக்காட்சி புதுப்பித்தல் | 6 | - | 6 | - | - | - | - | - | - |
| 5 | அலுமினியம் பெப்ரிகேட்டர் | - | - | - | 13 | 0 | 13 | 10 | 0 | 10 |
| 6 | ஆடை தைத்தல் | - | - | - | 0 | 16 | 16 | 0 | 16 | 16 |
| 7 | வீட்டு மின்நுட்பவியலாளர் | - | - | - | 5 | 5 | 10 | 12 | 2 | 14 |
| 8 | ஹொட்டல் முகாமைத்துவம் | - | - | - | 10 | 2 | 12 | 17 | 2 | 19 |
| 9 | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் | - | - | - | 2 | 17 | 19 | 7 | 11 | 18 |
| 10 | மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர் | - | - | - | 13 | - | 13 | 22 | 0 | 22 |
| 11 | உருக்கிஒட்டுநர் கலை | - | - | - | 1 | - | 13 | 6 | 0 | 6 |
| 12 | தச்சு வேலை | - | - | - | 6 | - | 6 | - | - | - |
| | ***மொத்தம்*** | 45 | - | 45 | 62 | 40 | 102 | 74 | 31 | 105 |
| | | 252 | | | | | | | | |





### 10.2.2 பிரஜா சக்தி (ஈகியோஸ்ட்) நிலையங்கள்

தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பத்தை பரவலாகப் பயன்படுத்தும் குறைந்த வரப்பிரசாதம் பெற்றுள்ள மலையக மக்களுக்கு பூரணமான மற்றும் பரந்தளவிலான சமூக பொருளாதார அபிவிருத்தியை உரித்தாக்கிக்கொடுப்பது இந்த கருத்திட்டத்தின் நோக்கமாகும். 2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வனராஜா தோட்டத்தில் முதலாவது பிரஜா சக்தி நிலையம் தாபிக்கப்பட்டதுடன் தற்போது நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டதாக 44 பிரஜா சக்தி நிலையங்கள் இயங்கிவருகின்றன. அதற்கமைய பெருந்தோட்டத்துறை சமுதாயத்தினரின் கல்வி, சமூக கலாசார செயற்பாடுகள் தொடர்பில் கூட்டு செயன்முறையொன்றை பேணிவருவதுடன் தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக பெருந்தோட்ட சமுதாயத்தினர் மத்தியில் தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சியை ஏற்படுத்துவது இதன்மூலம் இடம்பெறுகின்றது. நாடு முழுவதிலும் 44 பிரஜா சக்தி நிலையங்களில் 2016 ஜனவரி முதல் டிசெம்பர் மாதம் வரை பதிவுசெய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 3004 ஆகும்.



### இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டில் பிரஜாசக்தி நிலையங்கள் ஊடாக கீழ் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மக்கள் பங்களிப்புடன் இடம்பெற்றுள்ளன

பெருந்தோட்ட மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டு தேசிய நடவடிக்கைத் திட்டம் தொடர்பான 30 அறிவூட்டல் நிகழ்ச்சிகள் ஹட்டன், நுவரெலியா, பதுளை, கண்டி, காலி மற்றும் இரத்தினபுரி பிரதேசங்களில் நடைபெற்றது.

- சர்வதேச இளைஞர் தின கொண்டாட்டங்கள்
- பாடசாலை மாணவர்களுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்
- யோகாசனம் தொடர்பான செயலமர்வு
- தோட்ட வைத்திய அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்
- ஆரம்ப பிரிவு கல்வி செயற்பாடுகள் தொடர்பான நிகழ்ச்சித்த திட்டங்கள்
- மகளிர் தின கொண்டாட்டங்கள்
- சுயதொழில் செயலமர்வு (கைப்பை தயாரிப்பு)
- சர்வசே அன்னையர் தின கொண்டாட்ட நிகழ்வுகள்
- சுகாதாரம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சிகள்
- தொற்றுநோய்கள் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சிகள்
- சிறுவர் தின கொண்டாட்ட நிகழ்வுகள்











மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

### 10.2.3 தொண்டமான் கலாசார நிலையம், ரம்பொட

குறைந்த வசதிகளைக் கொண்ட மலையக சமுதாயத்தினரின் கலாசார மற்றும் கலைத்திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியரின் கண்காணிப்பின் கீழ் முழுநேர அடிப்படையில் கர்நாடக இசை, வீணை, மிருதங்கம், வயலின் வாசிப்பதற்கான பயிற்சிகள் இதன்மூலம் வழங்கப்படுகின்றன. தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் எதிர்நோக்கியிருந்த நிதி நெருக்கடி காரணமாக மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாது போயுள்ளது. அதற்கமைய 2016ஆம் ஆண்டுக்கு இந்த நிலையத்தின் மூலம் எந்தவொரு நிகழ்ச்சித்திட்டத்தையும் அமுல்படுத்தும் வாய்ப்புக்கிடைக்கவில்லை.

### 10.2.4 நோர்வூட் விளையாட்டு வளாகம்

2005இன் 19ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இந்த விளையாட்டு வளாகம் தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் 2011ஆம் அண்டில் 25 மில்லியன் ரூபாவான தொகை செலவிடப்பட்டு இந்த விளையாட்டு வளாகம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையாட்டு மைதானம், உள்ளக பெட்மிடன் அரங்கு ஆகியன 2012ஆம் ஆண்டில் திறந்துவைக்கப்பட்டன. தொண்டமான் மன்றம் எதிர்நோக்கியிருந்த நிதி நெருக்கடி காரணமாக விளையாட்டுக்கூடத்தின் புதிய அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்தும் மேற்கொள்ள 2016ஆம் ஆண்டில் நிதி கிடைக்காத போதிலும் சூழவுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களினால் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



Thondaman Sports Complex - Norwood



වැවිලි අංශය රටේ සංවර්ධනය සහතික කිරීමෙහිලා දයක වන ප්‍රධාන අංශයකි.  එසේ වුවද විශේෂයෙන් දරිද්‍රතාව, සෞඛ්‍ය හා පෝෂණය, පූර්ව ළමාවිය රැකවරණය, අධ්‍යාපනයට ප්‍රවේශය, සෞඛ්‍යාරක්ෂිත පානීය ජලය, සනීපාරක්ෂාව සහ කාන්තා බලගැන්වීම යනාදී කරුණු සම්බන්ධයෙන් නාගරික හා ග්‍රාමීය අංශයන්හි  දර්ශක හා සසඳන කළ වැවිලි අංශයේ වෙසෙන ජනතාව එවැනි පහසුකම්වලින් වඩාත් පීඩිත ජන කොට්ඨාශය ලෙස සැලකේ. මෙම ගැටලු නිරාකරණය කර ඔවුන්ගේ ජීවන මට්ටම ඉහළ නැංවීමේ අරමුණින් රජය විසින් මෙම අමාත්‍යාංශය ස්ථාපිත කරන ලදි.

பெருந்தோட்டத்துறை நாட்டின் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதில் பங்களிப்புச் செய்யும் பிரதானமான ஒரு துறையாகும். எனினும், குறிப்பாக வறுமைநிலை, ஆரோக்கியமும் போசாக்கும், முன்சிறுவர் பராய பாதுகாப்பு, கல்விக்கான வாய்ப்பு, பாதுகாப்பான குடிநீர், சுகாதாரம், மகளிர் வலுவூட்டல் முதலிய விடயங்கள் தொடர்பில் நகர மற்றும் கிராமிய துறைகளின் குறிகாட்டிகளுடன் ஒப்பிடுமிடத்து பெருந்தோட்டத்துறை வாழ் மக்கள் அவ்வாறான வசதிகளினால் பெரிதும் பலவீனமடைந்த மக்களாக கருதப்படுகின்றனர். ஆகவே இப்பிரச்சினைகளை நிவர்த்தி செய்து அவர்களின் வாழ்நிலையை முன்னேற்றும் நோக்கிலேயே அரசாங்கத்தினால் இவ்வமைச்சு தாபிக்கப்பட்டது.

The plantation sector is one of the main sectors contributing for the assurance of country's development. However, the plantation community is the most deprived community in terms of social development when compared with urban and rural sector indicators particularly on poverty, health and nutrition, early childhood care, access to education, safe drinking water, sanitation and women empowerment.  In addressing the above issues, this Ministry was set up by the Government focusing on improving their living standards.

කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு

**Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development**